சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பழுதடைந்த பொள்ளாச்சி (வடக்கு) வட்டம், இராமப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்தை இடிக்க அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை

அரசாணை (1டி) எண்.590 நாள்: 09.10.2009

படிக்கப்பட்டவை.

1. மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் கடித ந.க.எண்.1763 / 2008 / டி 1, நாள் 24.11.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடித எண்.90247 / 2008 / டியு 3, நாள் 19.06.2009.

------

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி (வடக்கு) வட்டம், இராமப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக் கட்டிடத்தை இடிக்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார். இக்கட்டிடம் 756.50 சதுர அடி கொண்டதாகும். இக்கட்டிடம் 1992–ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு 17 ஆண்டுகள் ஆகிறது. தற்போது இக்கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்று இராமப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கருத்துரு அனுப்பியுள்ளார் என்றும் பழுதடைந்துள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு 16.05.2008 அன்று ஊராட்சி ஒன்றிய தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்தப் பள்ளிக் கட்டிடத்தை இடிப்பதற்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 03.04.2008–ல் இடிக்கப்பட வேண்டிய கட்டிடம் குறித்து அரசால் கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:-

.. /த.பி.பா./..

(அ) கட்டிடத்தின் வயது 40 ஆண்டுகளுக்கு மிகையாக இருந்தால் கட்டிடத்தின் பரப்பினை ஏதும் கருத்தில் கொள்ளாமலும், கட்டிடத்தின் வயது 30 ஆண்டுகளுக்கு அதிகமாகவும் கட்டிடத்தின் பரப்பளவு 450 சதுர அடிக்கும் குறைவாகவும் இருக்கும் பட்சத்தில் அத்தகைய கட்டிடத்தை இடிப்பதற்கு உரிய நெறிமுறைகள் பின்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரே உரிய ஆணை பிறப்பிக்கலாம்.

(ஆ) கட்டிடத்தின் வயது 30–லிருந்து 40–க்குள்ளும் கட்டிடங்களின் பரப்பளவு 450 சதுர அடிக்கு மேலான கட்டிடங்களை இடிப்பதற்கு உரிய நெறிமுறைகள் பின்பற்றி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் ஆணை பிறப்பிக்கலாம்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் இந்நேர்வில் இடம்பெற்றுள்ள கட்டிடத்தின் வயது 30 ஆண்டுகளுக்கு குறைவாக உள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, அரசாணையில் 30 ஆண்டுகளுக்கும் குறைந்த வயதுள்ள கட்டிடங்கள் குறித்து குறிப்பாக அறிவுறுத்தல்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை எனினும், கட்டிட கட்டமைப்பு நிலையையே முதலில் கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த நேர்வில் மேற்பார்வைப் பொறியாளரால் (ஊரக வளர்ச்சி) ஆய்வு செய்யப்பட்டு, அவரின் கீழ்க்கண்டவாறான அறிக்கை பெறப்பட்டுள்ளது:-

(1) முன்புற மற்றும் பக்கவாட்டு சூரியஒளித் தடுப்புகள் பழுதடைந்தும், உள் கட்டமைப்புகள் அரிக்கப்பட்டும், வெளியில் தெரிவதாகவும் உள்ளது.

(2) கட்டிடத்தின் மேல் உள்ள சூரியஒளித் தடுப்புகள் அனைத்தும் முழுவதுமாக பழுதடைந்துள்ளது.

(3) கட்டிட சுவர்கள் அனைத்திலும் அதிக அளவிலான விரிசல்கள் உள்ளன.

(4) கட்டிடத்தின் கூரையின் சிமெண்ட் பூச்சு, மேற்புறம் தேங்கிய தண்ணீரால் ஆங்காங்கு பெயர்ந்து விழுந்துள்ளது.

(5) இரும்பு கதவுகள் மற்றும் ஜன்னல்கள் முழுவதும் பழுதடைந்துள்ளன.

4. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேற்குறிப்பிட்ட பள்ளிக் கட்டிடத்தின் வயது 17 ஆண்டுகளே ஆகியுள்ள போதிலும், கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையற்ற நிலையை கருத்தில் கொண்டு, இடிப்பதற்கு சிறப்பினமாகக் கருதி அனுமதி அளிக்க கோரியுள்ளார். மேலும், மேற்குறிப்பிடப்பட்ட பள்ளிக் கட்டடத்தின் தற்போதைய நிலையை பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ளார்.

./த.பி.பா./.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி (வ) வட்டம், இராமப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் 756.50 சதுர அடி பரப்பளவு உடைய கட்டிடம் கட்டப்பட்டு 17 ஆண்டுகளே ஆனாலும், அவற்றின் ஸ்திரத்தன்மையற்ற கட்டமைப்பினைக் கருத்தில் கொண்டு சிறப்பினமாக கருதி அக்கட்டிடத்தை இடிக்க அனுமதி அளிக்க முடிவுசெய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக்வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை – 15.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோயம்புத்தூர் மாவட்டம்,
கோயம்புத்தூர்.

நகல்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்